# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது

இல. 7,922 — 1932 ம் ஸ்ரூ வைகாசிமீ 6 ந் திகதி, வெள்ளிக்கிழமை.

## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஸ்ரூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தென் மாகாணத்தின் அம்பான்தோட்டைப் பிரிவில் மேற்குக் கிறுவப்பத்தில் மகாவெலியில் பொதுப்பாவிப்பிற்கு ஓர் கக்கூஸ் அமைத்தற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

அனுபர்தம் 4. பிரதமபடத்து இல. 302. குறிச்சி—நாக்குலுகமுவா.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 260A3 | வத்தகேவத்த .. | வெண்பூமி .. | மாவெலையிலிருக்கும் டீ. வ். ஏ. கலப்பத்தி, குடாவல்லகலை—டீ. டீ. ரத்னவீர, நாகுலுகமுவா மேற்கில்—டீ. சீ. டசனுயகவும், டீ. யே. அட்டபத்துவும், நாகுலுகமுவா கிழக்கிலிருக்கும் கே. யோன்சிங்கோவும், கே. ச்சிகாமியும், பீ. ஏ. சில்வாவும், ஏ. பீ. நிஞேகாமியும், ஈ. பீ. பீடறசிங்கோவும், பீ. நங்கோசாமியும், குடவெல்லக்கெலாவிலிருக்கும் டபிள்யு. பி. மென்சிகாமியும், யே. எஸ். முத்துமலாவும் | 0 0 1·4 |
| 260A4 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 0 0·5 |
| 261A | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 0 6 |
| 261B | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 0 0·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரூ த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக கற்பனை செய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் சொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1932 ம் ஸ்ரூ ஜூன் மாசம் 10 ந் தேதியிலன்று மாலை 2·30 மணிக்கு நாகுலுகமுவ இன்கலிஸ் சிங்கள பாடசாலையில் என்முன்பாக வெளிப்படுத்தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

சித்திரை மாசம் 1 திகதியின் 7,916 ம் கெசெற் பத்திரிகையிலிருந்த அறிவித்தல் இதனுல் அவ விலப்படும்.

அம்மான்தோடை கச்சேரி,
1932 ம் ஸ்ரூ மேமீ 2 ந் உ.

அப். லீச்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஸ்ரூ த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் உவெலிமடையில் மோட்டோர் வஸ் நிற்பாட்டும் இடத்துக்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

கடைசிப்படத்து இல. 58. அட்டவணை இல. 8. குறிச்சி—அகம்பொடிகம இதின் பாகம் உவெலிமடை சுகாதார சங்கல்லைகளுக்குள் உள்ளது.

| துண்டு | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 30 | கம்பகிலேகும்புற .. | வயற்பூமி .. | (1) மேரி கிருன்ற், c/o டி பி. உவில்லியம் சேவுகன், பொலீஸ் கோடு அட்டன்; (2) திரிங்தே கல்கொட்டுவேகெதர பீற்றர் கிருன்ற், அகம்பொடிகம, உவெலிமடை; (3) டொனல்ட் கிருன்ற, மெதுவா தோட்டம், சலாபம்; (4) கல்கொட்டுவேகெதர, சிரிப்பினி, அகம்பொடிகம | 0 0 4·4 |

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விலாசம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 3D | கம்பகிலேதம்புற (வீட்டு இலக்கம். 1) | வயற்பூமி .. | (1) நல்லமீராசாய்ப்புவின் மகன் மொகிதீன் காதர்மீரா சாய்ப்பு, உவெலிமடை; (2) டொன் பிரான்சிஷன் அமாரிஸ் அப்புகாமி, (3) டபிள்யு. மென்சிநோணகாமினே, டம்பவின்ன, உவெலிமடை | 0 0 24·4 |
| 3E | தொறகொடகும்புற | ஷை .. | ராசபக்ஷ துரையலாக்கே மகிமி, அகம்பொடிகம, உவெலிமடை | 0 0 27·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஷைப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1932 ம் ஸ்ரீ ஆனி (ஜூன்) மாசம் 13 ந் தேதியிலன்று காலமே 10 மணிக்கு வதுளைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த்தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

வதுளைக் கச்சேரி,
1932 ம் ஸ்ரீ வைகாசிமீ 3 ந் உ.

டீ. ஏ. ஹொட்சன்,
ஊவா மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

## காணி நிர்ணய முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல் நம்பர் 112 (கேகாலை).

இதனோடிணைந்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1932 ம் ஆண்டு (மே) வைகாசிமீ 6 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1932 ம் ஆண்டு (மார்ச்சு) பங்குனிமீ 30 ந் தேதியிலன்று கேகாலைக் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

ஏ. ஈ. கிறிஸ்ரோபல்ஸ்,
அரசாட்சி ஏசென்று.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரத்தை கேகாலை உதவி அரசாட்சி ஏசென்று அவர்களிடமும் அளவைப் படங்கள் சர்வேயர் ஜெனறல் நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

சப்பிரகாம மாகாணம் கேகாலை டிஸ்திறிக்ட் மூன்று கோறளைகள் பனைவல்கோறளை கிழக்கு இம்புல்பிற்றியா என்னும் கிராமத்திலிருக்கும் கீழே சொல்லப்படும் காணித்துண்டுகள்.

I.—பிரதமபடம் 3,935.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 9 | அரம்பெக்கண்டெவன்யாய (கலுகொல்லை எல்லைக்கும் அல்லப்பிற்ற எல்லைக்கும் விடப்பட்டது) .. .. | 8 3 4 |
| 10 | அரம்பெக்கண்டெவன (அல்லப்பிற்ற எல்லைக்கு விடப்பட்டது) .. .. | 5 2 29 |
| 11 | அரம்பெக்கண்டெவன .. .. | 169 1 38 |
| 12 | ஷை (மகா ஓயாவுக்கு விடப்பட்டது) .. | 6 0 35 |
| 13 | ஷை (கலுகொல்லை எல்லைக்கும் வத்தைவன எல்லைக்கும் விடப்பட்டது) .. | 7 2 2 |
| 14 | ஷை (வத்தவன எல்லைக்கு விடப்பட்டது) | 5 0 33 |
| 15 | அரம்பெக்கண்டெவன .. .. | 3 0 28 |
| 16 | மலபொடமூக்கலான .. .. | 30 0 7 |
| 17 | அரம்பெக்கண்டெவன .. .. | 5 2 35 |
| 18 | ஷை .. .. | 94 3 3 |
| 19 | ஷை (மகா ஓயாவுக்கு விடப்பட்டது) .. | 0 1 32 |
| 20 | அரம்பெக்கண்டெடெனியா .. | 0 1 21 |
| 21 | ஷை .. .. | 0 1 24 |
| 22 | ஷை (கல்லல்லெ எல்லைக்கு விடப்பட்டது) .. | 1 2 15 |
| 23 | இல்லெக்கெற்றியமூக்கலான .. | 5 0 3 |
| 24 | அரம்பெககண்டெவன .. .. | 106 3 0 |
| | மொத்தம் .. | 451 0 29 |

எல்லைகள்; வடக்கு-ஏ. ஜீ. தேகிஸ் அப்புகாமியும் மறுபேரும் உரித்தாடும் மகாவத்தைகேனயும் றற்றபேரதென்னயும், ஏ. ஜீ. தேகிஸ் அப்புகாமியும் மறுபேரும் உரித்தாடும் றற்றபேரதென்னடேனியாவும், ஏ. ஜீ. தேகிஸ் அப்புகாமியும் மறுபேரும் உரித்தாடும் கந்தொலவனயும், முடிக்குரிய கந்தொலகலமூக்கலானயும், ஏ. ஜீ. தேகிஸ் அப்புகாமியும் மறுபேரும் உரித்தாடும் அலுத்கமுகவனயாயவும; கிழக்கு-மகாஓயாவும், அ. இஸ்மான் உரித்தாடும் ஈரியககாடெனியாவும், கொஸ்ககாசின்னவும் மூறெகண்ட கிராமங்களின் எல்லைகளும் கல்லல்லெ எல்லையும்; தெற்கு-கல்லெல்லயும் கும்பிற்றிககண்ட கிராமங்களின் எல்லைகளும். முடிக்குரிய கலுககோகேமூககலானயும் (பிரதமபடம் 3,935 காணித்துண்டு 25), றுக்மல்டேனிய எல்லையும், எல். பேயிலித் துரையவர்கள் உரிததாடும் அரம்பெக்கண்டெவனயும் (றுக்மல்டேனியா எல்லைகு விடப்பட்டது) (பிரதமபடம் 3,935 காணித்துண்டு 26), முடியும் எச். சயசேகரவும் உரித்தாடும் அரம்பெக்கண்டெகும்புற என்னும் வரக்கத்தென்னெகும்புறவும் (பிரதமபடம் 3,935 காணித்துண்டு 24B), முடியும் எச. சயசேகரவும் உரிததாடும் வரககத்தென்னெகேனெவத்தை என்னும் அரம்பெககண்டெகேனெவத்தையும் (பிரதமபடம் 3,935 காணித்துண்டு 24A); மேற்கு-ஏ. ஜீ. தேகிஸ் அப்புகாமியும் மறுபேரும் உரித்தடும் மின்கம்பிற்றியெவனயும், குறுவகாவ எல்லையும், யபறலுவெ எல்லையும், ஏ. மொகொற்றிகாமியும் மறுபேரும் உரித்தாடும் யபறலுவெ வத்தையும், எம். குசல்காமியும் மறுபேரும் உரித்தாடும் இண்டிகசாவனயும், கற்றுகொல்லெ எல்லையும், பீ. குசல்காமியும் மறுபேரும் உரித்தாடும் கலுகல்மோதறவத்தையும், எல். பெயிலித்துரையவர்கள் உரித்தாடும் அரம்பெககண்டெவனயயவும் (பிரதமபடம் 3,935 காணித்துண்டு 7), எல். பேயிலித்துரையவர்களும் ஏ. ஜீ. தேகிஸ் அப்புகாமியும் மறுபேரும் உரித்தாடும் டொம்பகாவனயும் (வாதாடப்படுகிறது) (பிரதமபடம் 3,935 காணித்துண்டு 4), முடிக்குரிய டொம்பகாவனமூககலானயும் (பிரதமபடம் 3,935 காணித்துண்டு 6).

குறிப்பு.—மேறசொல்லிய எல்லைகளுக்குள் ளிருக்கும் கீழ் சொல்லிய காணித்துண்டுகள் இவ்வறிவித்தலின் இப்பகுதியிலிருந்து விலத்தப்பட்டும் அவைகளின் மொத்த விசாலமாகிய 7 ஏக்கர் 3 றூட் 20 பேட்ச் மேலே காட்டிய 451 ஏக்கர் 29 பேட்சில் சேர்க்கப்படாமலும் இருக்கிறது.

பிரதமபடம் 3,935.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 27 | யபுரெலுவெவத்தை .. | 0 0 39 |
| | வெண்நிலப் படம் 1,162. | |
| — | — .. | 7 2 21 |
| | மொத்தம் .. | 7 3 20 |

## II.—பிரதமபடம் 3,935.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 25 | கலுக்கொகே மூக்கலான | .. 5 0 29 |

எல்லைகள் ; தெற்கு-கும்பிற்றிக்கண்ட கிராமஎல்லையும் கல் பாரையும்; மறுபக்கங்களில எல். பேயிலித்துரை உரித்தாடும் அறம்பெக்கண்டெகேன (பிரதமபடம் 3,935 காணித் துண்டு 24).

## III.—பிரதமபடம் 3,935.

| காணித் துண்டு | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 26 | அறம்பெகண்டெகேன (ருகமல்டெனிய எல்லைக்கு விடப்பட்டது) | .. 1 0 0 |

எல்லைகள் : வடக்கு-எல். பேயிலித்துரை உரித்தாடும் அறம்பெக்கண்டெகேனயும் (பிரதமபடம் 3,935 காணித் துண்டு 24), முடியும் எச். சயசேகரவும் உரித்தாடும் வரக்கத் தென்னகேனவத்தை என்னும் அறம்பெக்கண்டெகேன வத்தை (பிரதமபடம் 3935 காணித்துண்டு 24 A) ; கிழக்கும் தெற்கும்-றுக்மல்டேனிய எலை ; மேற்கு-ஏ. ஜீ. தேகிஸ் அப்பு காமியும் மறுபேரும் உரித்தாடும் மிங்கம் பிற்றியெசேன.

## IV.—பிரதமப்படம் 3,935.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 1 | அறம்பெகண்டெகேன .. | 2 | 2 | 5 |
| 2 | மாறககாடேனியா .. | 0 | 2 | 27 |
| 3 | அறம்பெகண்டகேன .. | 4 | 3 | 13 |
| 4 | டொம்பககாகேன .. | 46 | 1 | 17 |
| 5 | டொம்பககாகேனவல .. | 0 | 0 | 6 |
| 6 | டொம்பககாகேன மூக்கலான | 4 | 0 | 21 |
| 7 | அறம்பெகண்டெகேன்யாய | 32 | 3 | 36 |
| | மொத்தம் .. | 91 | 2 | 5 |

எல்லைகள் வடக்கு : மாறககாடேனிய எலையும் ஏ. முதலி காமியும் மறுபேரும் உரித்தாடும் கீமககாபிற்றியாவத்தையும், ஏ. ஜீ. தேகிஸ் அப்புகாமியும் மறுபேரும் உரித்தாடும் மகாவத்தைசேனயும் றற்றபேறதென்னையும்; கிழக்கு : எல் பேயிலித்துரை உரித்தாடும் அறம்பெககண்டெகேனயும் (பிரதமபடம் 3,935 காணித்துண்டு 11), எல். பேயிலித்துரை உரித்தாடும் அறம்பெகண்டெ கேன்யாயவும் (பிரதமபடம் 3,935 காணித துண்டு 9, காலுகொல்லெ எல்லைக்கும் அல்லப்பிற்ற எலைக்கும் விடப்பட்டகாணி); தெற்கு : எல். பேயிலித்துரை உரித்தாடும் அறம்பெ கண்டெகேன்யாய (பிரதமபடம் 3,935 காணித்துண்டு 9, காலுகொல்லெஎலைக்கும் அல்லப்பிற்ற எலைக்கும விடப்பட்டகாணி); மேற்கு பீ. குசல்காமியும் மறுபேரும் உரித்தாடும் கலுகலமோதறவத்தையும், எல். பேயிலித்துரை உரித்தாடும் அறம்பெகண்டெகேன்யாயவும் (பிரதமபடம் 3,935 காணித்துண்டு 8 அடிப்பாதைக்கும் மகாஎலைக்கும் விடப்பட்டகாணி), ஏ. விஜெகாமியும் மறுபேரும் உரித்தாடும் புறுவெவத்தையும், ஏ. மொகொற்றுகாமியும் மறுபேறும் உரிததாடும் பில்லவகேனவும், ஏ. கெறத்தாமியும் மறுபேரும் உரித்தாடும் புதுமலுவெவத்தயும், ஏ. முதலிகாமி உரித்தாடும் புதுமலுவெவத்தையும், ஏ. முதலிகாமி உரித்தாடும் புதுமலுவெடேண்யெகும் புறவும், அத்துகோறுளகெ அப்புகாமியும் மறுபேரும் உரித்தாடும் பில்லவெகேனயும்.

குறிப்பு.—மேற்சொல்லிய எல்லைகளுக்குள் ளிருக்கும் கீழே சொல்லப்படும் காணித்துண்டு இவ் வறிவித்தலின் இப்பகுதியிலிருந்து விலத்தப்பட்டும் அதன் விசாலமாகிய 1 றூட் மேலே காட்டிய 91 ஏக்கர் 2 றூட் 5 பேட்சில் சேர்க்கப்படாமலும் இருக்கிறது.

## பிரதமபடம் 3,935.

| காணித் துண்டு | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 7A | பறுவெகேனவத்தை | .. 0 1 0 |

## V.—பிரதமபடம் 3,935.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 8 | அறம்பெகண்டெ கேன்யாய (அடிப்பாதைக்கும் மகா எல்லைக்கும் விடப்பட்டது) | .. 0 3 20 |

எல்லைகள் வடக்கு: ஏ. விஜேகாமியும் மறுபேரும் உரித்தாடும் புறுவெவத்தை ; கிழக்கு : எல். பேயிலித்துரை உரித தாடும் அறம்பெக்கண்டெகேன்யாய (பிரதமபடம் 3,935 காணித்துண்டு 7) : தெற்கு : எல் பேயிலித்துரை உரித்தாடும் அறம்பெக்கண்டெ கேன்யாயவும் (பிரதமபடம் 3,935 காணித்துண்டு 7), பி. குசல்காமியும் மறுபேரும் உரித்தாடும் கலுகல்மோடறவத்தையும் ; மேற்கு-மகா எலை.

## 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

### காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல் இலக்கம் 113 (கேகாலை).

இதனோடிணைந்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோங்கைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1932 ம் ஸ்ரீ (மே) வைகாசிமீ 6 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற செய்ய வேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1932 ம் ஸ்ரீ (மார்ச்) பங்குனிமீ 30 ந் தேதியிலன்று கேகாலை கச்சேரியிற் கொடுக்கப்பட்டது.

ஏ. ஈ. கிறிஸ்தோபல்ஸ்,
உதவி அரசாட்சி ஏஜன்று.

குறிப்பு—(a) இககாணிகளைப்பற்றிய மேலதிகமான விபரத்தை கேகாலை உதவி அரசாட்சி ஏசன்று அவர்களிடமும் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகளி லெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக் காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

### அட்டவணை.

சப்பிரகாம மாகாணம், கேகாலை டிஸ்திறிக் வெலிகல் கோறளையில் ஒத்தாறப்பற்றுவில் துல்கிரியா என்னுங் கிராமத்தில் உள்ள கீழே விபரிக்கப்படும் காணித்துண்டுகள்.

### பிரதமபடம் 3,906.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 85 | பஸ்போலகந்தைமூக்கலான (காட்டுக்கந்தோருக்காக சேமிக்கப்பட்டது) | 1 | 0 | 25 |
| 86 | ஷை .. | 110 | 3 | 17 |
| 87 | ஷை .. | 0 | 2 | 13 |
| 93 | ஷை (பாலுவத்தஎலைக்கு நெடுகவிடப்பட்டது) | 6 | 0 | 20 |
| 94 | பஸ்போலடெனியா (பாலுவத்தஎலைக்கு நெடுகவிடப்பட்டது) காட்டுக்கந்தோருக்காகச் சேமிக்கப்பட்டது) . | 0 | 0 | 24 |
| | மொத்தம் .. | 118 | 3 | 19 |

எல்லைகளாவன : வடக்கு-உரிமைப்படம் 407,738 (பிரதமபடம் 3,906 காணித்துண்டு 92) உரிமைப்படம் 286,206, சீ. தர்மரத்தின உரித்தாடும் திற்றிககாமுலகேனவத்தையும், டபிள்யு. சிறிவாதினவும் மறுபேரும் உரித்தாடும் திற்றிககாமுலகேனவத்தையும், டபிள்யு. சிறிவாதினவும் மறுபேரும் உரித்தாடும் திற்றிககாமுலகேனயும், எம். புஞ்சிவண்டாவும் மறுபேரும் உரித்தாடும் கலுகொண்டையாவவும் ; கிழக்கு-பாலுவத்தைஎலையும் உரிமைட்படம் 96,942 ல் உரித்தாடப்படும் காணியும் ; தெற்கு-கல்கடஉல்லஎலையும் எச். இறியாவும் மறுபேரும் உரித்தாடும் ஊளப்பள்டுறமுலகேன வத்தையும் ; மேற்கு-கல்கடஉல்லஎலையும் உரிமைப்படம் 412,329 ம் (பிரதமபடம் 3,906 காணித்துண்டு 88) ஆர். வீ. பொடிசிஞ்ஞோவும்மறுபேரும்உரித்தாடும் ஆண்டககாகல ககாவத்தையும், உரிமைப்படங்கள் 412,330, 412,331, 407,737 ம் (பிரதமபடம் 3,906 காணித்துண்டுகள் 89, 90, 91) உரிமைப்படம் 247,220 ம்.

---

## கேள்விப் பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

### தபோவாப் பகுதியில் கையாடவேண்டிய முறை.

புத்தளத்துக்குக கிழக்கே ஏறககுறைய 8 மைல் தூரத்திலுள்ள தபோவாக் குளத்தோடு சம்பந்தமான நெல் நிலங்களைப் பங்கிட்டுக் கொடுப்பதற்காக விண்ணப்பப்பத்திரங்கள 1932 ம் ஆண்டு மேமீ 21 ந் திகதி யன்று மட்டும் ஏற்றுக் கொள்ளப்படுமென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது. விண்ணப்பப்பத்திரங்கள் புத்தளம் அரசாட்சியாரின் உதவி ஏசன்றுத்துரை யவர்களுக்கு எழுத்துமூலம் அனுப்பவேண்டியது. விண்ணப்பக்காரர் தங்களின் முழுப் பெயர்களையும் விலாசங்களையும் கொடுக்கவேண்டியது. 1932 ம் ஆண்டு மேமாசம் 31 ந் தேதிகுப்பின் நிலத்தைப் பங்கிட்டுக்கொடுக்க விண்ணப்பக்காரரைத் தெரிவுசெய்வதற்காக ஒரு அல்லது அதற்குக் கூடிய காணிக கச்சேரிகள் நடத்தப்படும். இக் கச்சேரிகளைப்பற்றிய அறிவித்தல்கள் கொடுக்கப்படும். விண்ணப்பப்பத்திரங்களுடன் வைப்புப் பணம் அனுப்பவேண்டியதில்லை.

2. மேட்டு நிலமும் நெல் நிலமும் பங்கிட்டுக் கொடுப்ப தற்கு வசதிப்படும் நிலத்தைப் பங்கிட்டுக் கொடுப்பதற்கான நிபந்தனைகள் பின்வருமாறு :—

(1) உத்தரவுச்சீட்டுடையவர் பங்கிட்டுக்கொடுத்த திகதியிலிருந்து ஐந்து வருடத்துள் நெல் நிலத்தைப் பண்படுத்தவும் மேட்டு நிலத்தைத் திருத்தவும் வேண்டும்

(2) உத்தரவுச்சீட்டுடையவர் வருடாந்தம் ஒரு ஏக்கருக்கு வருடாந்தக் குத் கைப்பணம் ஐம்பது சதம் முறப்பணமாய்க் கொடுக்கவேண்டும்.

(3) உத்தரவுச் சீட்டுடையவர் நிலத்தை ஆட்சிகொண்ட மூன்றாம் வருடத்தின் பின் அரசாட்சியார் தீர்மானித்தபடி முதன்முறை ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் இரண்டுக்கு மேலாகாத நீர்பாய்ச்சல் வரி இறுக்கக் கடமைப்பட்டவராவர்.

(4) தெரிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பகாரனுக்கும் கொடுபடவேண்டிய நிலப்பரப்பையும் எவ்வாறு நிலத்துண்டுகள் நியமிக்கப்படவேண்டுமென்பதையும் உதவி அரசாட்சி ஏசண்டுத்துரை தீர்மானிப்பர். அப்படியான நியமிப்போடு சம்பந்தமான சகல கேள்விகளுக்கும் அவரின் தீர்ப்பே கடைசி முடிவானதாயிருக்கும்.

(5) உத்தரவுச்சீட்டுடையவர் தற்போதுள்ளதும் அல்லது இனிமேல் சட்டப்பிரகாரம் உண்டாக்கப்படுவதுமான சகல நீர்பாய்ச்சுதல் அல்லது பயிர்ச்செய்கைப் பிரமாணங்களுக்கு கீழ்ப்படிவாராவர்.

(6) உத்தரவுச் சீட்டுடையவர் நிலத்திலுள்ள மரத்தை வேலியடைக்க அல்லது அந்நிலத்திலேயே காவற் குடில்கள் அல்லது வீடுகள் கட்டப் பாவிக்க உரித்துடையராவர். எனினும் அவர் நிலத்திலிருந்து எவ்விசமாயேனும் எந்த மரத்தையும் உத்தரவின்றி எடுத்துக்கொண்டுபோகத் தத்துவமுடையரல்லர்.

(7) உத்தரவுச் சீட்டுடையவர் உதவி அரசாட்சி ஏசண்டரின் திருப்திக்கேற்ப தமக்கென் விடப்பட்ட நிலத்தில் ஓர் வீடுகட்டி அதில் வாசம்செய்தல் வேண்டும்.

(8) உத்தரவுச் சீட்டின் நிபந்தனைகள் எதையும் உத்தரவுச் சீட்டுடையவர் நிறைவேற்றத் தவறினால் அல்லது உத்தரவுச்சீட்டுடையவருக்கு மாறாகச் செய்யப்பட்ட தீர்ப்பை நிறைவேற்றுவதற்காக குறித்த நிலம் அல்லது உத்தரவுச் சீட்டுடையவரின் உரிமை நடுக்கட்டப்பெற்றிருந்தால், உதவி அரசாட்சி ஏசண்டர் உத்தரவுச்சீட்டை அழித்து நிலத்தையும் அதிலுள்ள பயிர்களையும், வைத்த மரங்களையும், வீடுகளையும் அல்லது செய்யப்பட்ட திருத்தங்களையும் கைப்பற்றலாம். உத்தரவுச்சீட்டுடையவராவது அல்லது அவர்மூலம் உருத்துக்கு வாதிப்பவரொருவராவது உத்தரவுச்சீட்டுடையவரால் அல்லது வேறு ஒருவரால் அக்காணியில் செய்யப்பட்ட திருத்தங்கள் ஏதன்பேரிலும் எவ்வித நஷ்ட பூர்த்தியும் கேட்பதற்கு உரித்துடையரல்லர்.

(9) உத்தரவுச் சீட்டுடையவர் தமக்கு விடப்பட்ட நிலத்தின் எப்பாகத்தையும் அரசினர் றோட்டுக்காகவோ, கால்வாய்களுக்காகவோ, வேறு முகாந்தரமெதற்காகவோ தேவைப்படும்போது, நஷ்ட பூர்த்தியின்றிக் கொடுத்தல் வேண்டும்.

(10) மேற்கூறிய 1 ம் நிபந்தனையிற் கூறப்பட்ட ஐந்து வருடத் தவணை முடிந்தவுடன் உத்தரவுச் சீட்டுடையவருக்கு உதவி அரசாட்சி ஏசண்டரின் திருப்திக்கு அவர் அந்நிலத்தைத் திருத்தியிருந்தால், அந்நிலம் பின்வரும் நிபந்தனைகளுக்கமைவாக அளிக்கப்படும் :—

(a) அரசினருக்கு வருடாந்தம் ஒரு சிறு தொகையான பணம் கட்டல் வேண்டும் அல்லது ஒரு சிறு அளவான மொத்தத்தொகையை பல வருடங்களுக்குப் பரப்பி தவணைகளில் கட்டல் வேண்டும்.

(b) உத்தரவின்றி நிலத்தை இன்னொருவருக்குக் கொடுக்கவாவது ஈடுவைக்கவாவது படாது.

(c) கடனுக்காக நிலத்தை விற்க முடியாது.

(d) நிலம் உழுது பயிரிடப்படல் வேண்டும்.

(e) ஒரு குறிக்கப்பட்ட பரப்பளவுக்குக் குறைவாக நிலப் பாகங்களை மறுபடி பாகஞ்செய்தலும் ஒரு குறிக்கப்பட்ட தொகையான ஆட்களன்றி அதற்கு மேலதிகமான ஆட்கள் அந்நிலத்தைத் தமக்கிடையில் பொதுவாக வைத்திருத்தலும் கூடாது.

சீ. வீ. பிறெயின்,
நிலக்காரியகர்த்தர்.

---

## காணி நில அளவைப்பற்றிய அறிவித்தல்.

### வடமேன் மாகாணம் 2 ம் பிரிவிலுள்ள காணிகளினளவைக் கேள்விப் பத்திரங்கள் அனுப்ப வேண்டிய கடைசித் தினம்.

இத்தாலறிவிப்பது வடமேன் மாகாணம் 2 ம் பிரிவெனப்படும் புத்தளம் சிலாபம் டிஸ்திறிக்குகளின் காணி அளவைக் கேள்விப் பத்திரங்களின் கடைசித் தினம், 1932 ம் ஆண்டு ஆனி மாசம் 15 ந் திகதி. இந்தத் திகதியின் பின் அனுப்பப்படும் காணிக் கேள்விப்பத்திரங்கள் மறுபடியும் அளவை தொடங்கும் காலம்வரையும் அளவைக்கனுப்பப்படமாட்டா.

மேற்படி இடங்களில் காணிகளை விலையாய் அல்லது குத்தகைக்கு எடுக்க விரும்புவோர் அவ்விதம் எடுப்பதற்கு ஏதும் தடைகளிருக்குமோ வென்றறியும் நோக்கமாய் அனுப்பும் கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்பட்டுப் பதியப்படும். மேற்கூறிய நியாயங்கள் காரணமாக இவைகள் தள்ளப்படமாட்டா.

வே. குமாரசுவாமி,
உதவி அரசாட்சி ஏசண்டு.

புத்தளம் கச்சேரி,
1932 ம் ஆண்டு சித்திரை மாசம் 26 ந் திகதி.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.